## மேற்பிரிவு - அ (01-09-2004 – 31-08-2006)

அதிகாரம் - 04 அறன் வலியுறுத்தல்

1. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
   ஆக்கம் எவனோ உயிர்க்கு

பொருள் : அறம் சிறப்பையும் தரும்; செல்வத்தையும் தரும். ஆகையால், மக்களுக்கு அறத்தைவிடச் சிறந்த செல்வம் யாது?

அதிகாரம் - 16 பொறை உடைமை

2. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
   வன்மை மடவார்ப் பொறை

பொருள் : ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது விருந்தினரைப் பேணாது விடுதல். அதுபோல் வலிமையுள் வலிமையாவது அறிவிலார் செய்த தீங்கினைப் பொறுத்தலாகும்.

அதிகாரம் - 23 ஈகை

3. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
   மாற்றுவார் ஆற்றலின் பின்

பொருள் : தவவலிமை உடையவரது வலிமை எல்லாம், தம்மை வருத்தும் பசியைப் பொறுத்துக் கொள்வதே. அவ்வலிமையும் பசியை ஈகையால் ஒழிப்பவரது வலிமைக்குப் பிற்பட்டதே.

அதிகாரம் - 38 ஊழ்

4. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
   தெள்ளியர் ஆதலும் வேறு

பொருள் : உலகத்தில் ஊழினால் உண்டாகிய இயற்கை இருவகையானது. செல்வராதலும் வேறு; தெள்ளிய அறிஞராதலும் வேறு.

அதிகாரம் - 45 பெரியாரைத் துணைக் கோடல்

5. தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
   செற்றார் செயக்கிடந்தது இல்

பொருள் : தக்க பெரியாரைச் சுற்றமாகக் கொண்டு அவர் வழியில் நடக்க வல்லவனுக்கு, பகைவர் செய்யக் கூடிய தீங்கு ஒன்றுமில்லை.

அதிகாரம் - 48 வலி அறிதல்

6. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
   இல்லாகித் தோன்றாக் கெடும்

பொருள் : தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கேற்ப வாழாதவனின் வாழ்க்கை, பல வளங்களும் உள்ளது போல் தோன்றி, உண்மையில் இல்லாதவனாய்ப் பின் அப்பொய்த் தோற்றமும் இல்லாது அழியும்.

அதிகாரம் - 60 ஊக்கம் உடைமை

7. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
   நில்லாது நீங்கி விடும்

பொருள் : ஒருவனுக்கு ஊக்கம் உடைமையே நிலையான உடைமை ஆகும். மற்றப் பொருளுடைமை நிலையில்லாமல் நீங்கிவிடும்.